Lakeridge Health



Cynthia Davis
President and CEO



Dr. Tony Stone
Chief of Staff

**மே 2021**

**அன்பார்ந்த நண்பர்கள் மற்றும் அயலிடப் பெருமக்களுக்கு,**

லேக்றிட்ஜ் ஹெல்த் (Lakeridge Health) ஆரோக்கிய அமைப்புக்கு நீங்கள் தொடர்ச்சியாக வழங்கி வரும் ஆதரவுக்கும், கோவிட்-19 நோய் பரவுவதைத் தடுக்க நீங்கள் எடுத்து வரும் முயற்சிகளுக்கும் நாங்கள் நன்றி கூறுகிறோம். எமது சமூகத்தினருடனும் ஆரோக்கிய பராமரிப்பில் எமது பங்காளர்களாக உள்ள நிறுவனங்களுடன் சேர்ந்து நாம் எடுத்து வரும் முயற்சியின் விளைவாக கோவிட்-19 நோயின் பரவல் நிலையினைப் படமாகக் காட்டும் வரைகோட்டு வளைவினை கிடைநிலைக்குக் கொண்டுவந்து இருக்கிறோம். **கூட்டாக நாம் எடுத்த முயற்சிகள் பலன் தர ஆரம்பித்து விட்டன.**

எமது *ஒரே சேவைத்திட்டம், மிகச் சிறந்த ஆரோக்கியம்* என்ற தொலைநோக்கினை நோக்கி நாங்கள் ஒரு சமூகமாக வாழ்ந்து, பயணித்து வருகிறோம் என்பதற்கு இக்கூட்டு முயற்சி சிறந்த ஓர் உதாரணமாக இருக்கிறது. ஆரோக்கியமான ஒரு சமூகத்தைப் பாதுகாத்து, அதனை முன்னெடுத்து வரும் எமது முயற்சியில் எங்களுடன் சேர்ந்து தொடர்ந்து உழைத்து வரும் ஆரோக்கிய பராமரிப்பு வழங்குநர்கள் எல்லோருக்கும் நாங்கள் எமது மனப்பூர்வமான நன்றியை தெரிவிக்க விரும்புகிறோம்.

நீங்கள் அறிந்து உள்ளது போல, கரிசனம் விளைவிக்கின்ற கோவிட்-19 நோய்க் கிருமியின் மாற்றுருக்கள், மிகுந்த ஆக்கிரமிப்புடன் கூடிய இன்றைய மூன்றாவது நோய் அலைக்கு எம்மை இட்டு வந்துள்ளன. எனினும், ஏப்பிரல் மாத நடுப்பகுதி தொடக்கம் நோய் உறுதி செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து வந்துள்ள போதிலும், கோவிட்-19 நோய் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மக்களின் எண்ணிக்கையும் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு (ICU) அனுமதிக்கப்பட்டோரின் எண்ணிக்கையும் ஒன்ராறியோ மற்றும் டூறாம் பிரதேசம் ஆகியவற்றில் **மிக உயர்வாகவே** இருந்து வருகின்றன.

இந்த மூன்றாவது நோய் அலையின் காரணத்தால், Lakeridge Health ஆரோக்கிய அமைப்பு கஷ்டமான சில முடிவுகளை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானது. எங்களுக்கு ICU பிரிவிலும் மற்றும் எமது நெருக்கடி நிலைப் பராமரிப்புக்கெனவும் தேவைப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக, நாங்கள் அவசர நிலைமையற்ற சத்திர சிகிச்சைகளையும் வெளியில் இருந்து வந்து சிகிச்சைபெற்றுச் சென்ற நோயாளர் சேவைகளையும் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்க நேரிட்டது.

உங்களுக்குத் இது தெரிந்து இருக்கும். இவ்வாறு செய்தமையினால் கோவிட்-19 நோயாளர்களின் அவசர தேவைகளுக்கு சிகிச்சை அளிக்கவென வைத்தியசாலையில் வெற்றிடத்தையும் பணியாளர்களையும் பெற்றெடுக்க முடிந்தது. சம்பந்தப்பட்ட சேவைகளை முடிந்த அளவு விரைவாக, அதேசமயம் பாதுகாப்பாக திரும்பவும் நாங்கள் வழங்க முடியும் என்று நம்புகிறோம்.

தென்பகுதி ஒன்ராறியோ அடங்கிலும் உள்ள வைத்தியசாலைகளுக்கான வலையமைப்பின் ஒரு பகுதியாக Lakeridge Health ஆரோக்கிய அமைப்பு இருந்து வருகிறது. எமக்குச் சவாலாக எழுந்துள்ள இப்போராட்ட காலத்தில், ஒவ்வொரு நோயாளியும் மிகவும் பாதுகாப்பான உயர்தரம் கொண்ட பராமரிப்பினைப் பெறுகிறார் என்பதை உறுதி செய்வதற்காக, எமது வைத்தியசாலை கடந்த பல வாரங்களாக வேறு மருத்துவ நிலையங்களில் இருந்து நோயாளர்களை ஏற்றுக் கொண்டும் அத்துடன்/அல்லது அவ்வாறான மருத்துவ நிலையங்களுக்கு எமது நோயாளர்களை இடம் மாற்றி அனுப்பியும் வந்தது.

## ஒருவர் மற்றவரின் நலனைக் கவனித்தல்

எமது Lakeridge Health ஆரோக்கிய அமைப்புத் தொகுதி அடங்கிலும் பணியாற்றி வந்துள்ள ஒவ்வொருவருக்கும் கடந்த சில மாதங்கள் மிகுந்த மனவழுத்தம் தருகின்ற, களைப்பூட்டுகின்ற காலமாக இருந்து வந்துள்ளன. எமது சேவைக் குழுக்களின் அங்கத்தவர்கள், தொழில் திறமை மற்றும் துணிவு ஆகியவற்றுடன் முன்னர் ஒப்பிட முடியாத அளவு அழுத்தங்களுக்கு மத்தியில், தேவைகளுக்கு ஈடு கொடுத்தனர் என்பது பற்றி நாங்கள் மிகவும் பெருமிதம் அடைகிறோம். எமது சேவைக் குழுவினருக்கு மேலதிகமான ஆரோக்கிய சுகநலன் ஆதார உதவிகள் கிடைக்கின்றன என்பதை உறுதி செய்வதில் நாம் மிகுந்த கவனம் எடுத்து வந்தோம். முக்கியமான எமது நிறுவனக் கலாச்சாரத்தை பேணுவதற்கும் அதற்கு வலுவூட்டுவதற்குமாக, எமது சேவைக் குழுவினருக்கு கூடிய அளவில் தொடர்பாடல் மற்றும் அங்கீகரிப்புத் திட்டங்களையும் நாம் கிடைக்கச் செய்தோம்.

எமது சமூகத்தில் வாழும் உங்களில் பலரிடம் இருந்து மிகப்பல செய்திகள் எம்மை ஊக்குவித்தும் ஆதரித்தும் வந்து நாம் பெற்றுக் கொண்டோம். சமூக ஊடகங்களில் எழுதப்பட்ட கருத்துகள், மின்னஞ்சல்கள், ஆசிரியருக்கான கடிதங்கள், சித்திரம் தீட்டப்பட்ட கற்கள், பிள்ளைகளிடம் இருந்து வந்த சித்திரங்கள் இன்னும் பல அவற்றில் அடங்கி இருந்தன. இவற்றுக்காக எமது ஆழ்ந்த நன்றியை நாம் தெரிவிக்கிறோம். உங்களின் ஒவ்வொரு ஊக்கமளிக்கும் செய்தியையும் எமது சேவைக் குழுவினர் நயந்து ஏற்றுக் கொண்டுள்ளனர். உங்களுக்கு நன்றி!

## தடுப்பு மருந்து விநியோகம்

கோவிட்-19 தடுப்பு மருந்தினை எடுப்பதற்கு உங்களில் இத்துணை பலர் தீர்மானித்து இருப்பதையிட்டு நாம் உற்சாகம் அடைகிறோம். தடுப்பு மருந்துகள் இப்பொழுது பரவலாக எல்லா இடங்களிலும் கிடைப்பது கனேடிய மக்களின் அதிர்ஷ்டமாக உள்ளது. பயங்கரமான இந்த வைரசுக் கிருமியை சமாளித்து, முடிவில் அதனை வெற்றி

கொள்வதற்கான மிகச் சிறந்த முன்னேற்றப் பாதையாக கோவிட்-19 நோயுக்கான தடுப்பு மருந்தும் அத்துடன் சேர்ந்த முறையில் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வரும் ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளும் உள்ளன.

டூறாம் பிரதேசம் அடங்கிலும் இதுவரை 300,000 மருந்துப் பங்களவுகளிலும் கூடுதலான தடுப்பு மருந்து, மக்களுக்கு வழங்கப்பட்டு உள்ளது. பாரிய அளவில் தடுப்பு மருந்து வழங்கும் சிகிச்சை நிலையங்கள், மக்கள் கூடும் ஸ்தல சிகிச்சை நிலையங்கள், நடமாடும் சிகிச்சை நிலையங்கள், வேலைத்தல தடுப்பு மருந்து சிகிச்சை நிலையங்கள் மற்றும் மருந்தகங்கள் எனப் பல இடங்களில் தடுப்பு மருந்து விநியோகிக்கப்பட்டு வருகிறது. தடுப்பு மருந்தின் வழங்கல் நிலை மேலும் உயரும் பொழுது இன்னும் கூடிய நபர்களுக்கு தடுப்பு மருந்து வழங்கும் சந்திப்புகள் ஒழுங்கு செய்யப்படும் என்பதை உறுதியாகக் கூற முடியும். தயவு செய்து Durham Region website இணையத் தளத்துக்குச் சென்று முன்னுரிமை வழங்கப்படும் மக்கள் தொகுதியினர் பற்றியும், இப்பிரதேசம் அடங்கிலும் தடுப்பு மருந்து வழங்கும் சந்திப்புகளை பெறுதல் பற்றியும் கிரமமாக வழங்கப்படும் புதுப்பித்த செய்திகளை அறிந்து கொள்ளுங்கள்.

## நோயாளரும் குடும்பமே அவருக்கு முதன்மையானது எனக் கருதும் தீர்வுவழிகளும்

எம்மிடம் உள்ள மூலவளங்களில் பலவகையானவற்றை மேலும் பயன் தரும் வழியில் பயன்படுத்துவது பற்றிய எமது சிந்தனைப் போக்கினை முன்னேற்றுவதற்கு, இன்று நிலவும் இப்பெரும்புல நோய் (pandemic) உதவி இருக்கிறது என்று கூறலாம். வைத்தியசாலையிலும் சமூகத்திலும் இதனைச் செயற்படுத்தி ஆரோக்கிய ரீதியாக மிகவும் பலவீனம் கொண்ட எமது நோயாளிகளுக்குப் பொருத்தமான பராமரிப்பினை பொருத்தமான இடத்தில் வழங்க முடியும். ஒன்ராறியோவில் உள்ள மற்றைய வைத்தியசாலைகளைப் போலவே கடந்த சில வருடங்களாக Lakeridge Health ஆரோக்கிய அமைப்பு வைத்தியசாலைகளிலும், தீவிர வைத்தியசாலை மட்டத்திலான மருத்துவ சேவைகள் தேவைப்படாத நோயாளர்கள் வைத்தியசாலையில் தொடர்ந்து தங்கி விடுவதையும், அத்தகையோரின் எண்ணிக்கை கணிசமான அளவு கூடுவதையும் காண முடிந்தது. வைத்தியசாலை போன்ற ஒரு சூழலில் நீண்டகாலம் தங்கி இருப்பது, குறிப்பாக பலவீனமான முதியோர் விடயத்தில், அவர்களின் ஆரோக்கியத்தை நிலைகுலைய வைப்பதும் அல்லாமல் சிதைவு அடையவும் செய்யலாம் என்பது எமக்குத் தெரியும்.

எமது சிகிச்சை நிலையச் சேவைப் பணிக்குழுவினர், இங்கு ஒவ்வொரு நோயாளியின் தேவைகளையும் விருப்பங்களையும் கூட்டு வழியில் அணுகி ஆராய்ந்து வருகின்றனர். நீண்டகால நோயாளர்கள் தமது வீடுகளுக்கு படிப்படியாக நகருதல் அல்லது குறித்த நபர்களின் தேவைகளை பொருத்தமாக வழங்கும் இன்னுமொரு பராமரிப்பு சூழலுக்கு மாறுதல் போன்ற மேலான மாற்று வழித் தீர்வுகளை காண்பதற்காக, எமது சேவையாளர்கள் மற்றைய சமூக சேவைப் பங்காளர்கள், நீண்டகால பராமரிப்பு இல்லங்கள், நோயாளியின் குடும்பத்தினர், பராமரிப்பு வழங்குவோர் ஆகியோருடன் நெருக்கமாக இணைந்து முயன்று வருகின்றனர்.

## பாதுகாப்பாக இருங்கள் – இது நீண்ட வாரஇறுதிக் காலம்

மாகாண அரசு விதித்து இப்பொழுது நடைமுறையில் உள்ள, வீட்டில்–தங்கி-விடுங்கள் என்ற உத்தரவு உங்களில் பலருக்கு விரக்தியை ஏற்படுத்தி உள்ளதாக நாம் அறிகிறோம். ஆனாலும், தற்பொழுது ஆரோக்கிய பராமரிப்புக்கென இருந்து வரும் மூலவளங்கள் மற்றும் ஆரோக்கிய பராமரிப்பினை பாதுகாப்பாக கருணையுடன் வழங்கும் எமது திறமை ஆகியவற்றை தொடர்ந்து பேணுவதற்காக, எல்லோரும் **விழிப்பாக இருப்பதும்** அத்துடன் **பொதுசன ஆரோக்கிய வழிநடத்தல் முறைகளை பின்பற்றி வருவதும்** முக்கியமாக உள்ளது. முகக் கவசம் அணிதல், கைச் சுத்தம் பேணுதல், உடல் ரீதியாக விலகி நிற்றல் மற்றும் முன்கூட்டியே பரிசோதனை செய்து கொள்ளுதல் ஆகியன எல்லோருக்கும் அவசியமாக உள்ளன.

துரதிஷ்டவசமாக கடந்த வருடம் ஒரு நிகழ்ச்சிப் பாணியை நாம் கண்டிருந்தோம் : பிரதானமான ஒரு விடுமுறை காலத்தைத் தொடர்ந்து, கோவிட்-19 நோயாளர் எண்ணிக்கை பெருகிக் கொண்டது. எனவே விக்ரோறியா தின விடுமுறை வார இறுதிக்குள் புகுவதற்குத் தயாராகும் இத்தருணத்தில் உங்கள் உதவியையும் ஒத்துழைப்பையும் நாம் மீண்டும் ஒரு முறை வேண்டிக் கொள்கிறோம்.

**ஒன்றாக நாம் செயற்பட்டால், இந்த நோய் வட்டத்தை உடைத்து விட முடியும்.**
**ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் இருந்து கொள்ளுங்கள்.**

இதனை முடிப்பதற்கு முன்பாக, ஆரோக்கியமான டூறாம் பிரதேசத்தைப் பேணி வளர்ப்பதில் நீங்கள் காட்டும் பொறுமை, அர்ப்பணிப்பு மற்றும் தீவிர செயலுறுதி ஆகியவற்றுக்கு நாம் நன்றி கூறுகிறோம்.

சிந்தியா டேவிஸ்
தலைவர் மற்றும் பிரதம நிர்வாக அதிகாரி
Cynthia Davis
President and CEO

கலாநிதி ரோனி ஸ்ரோன்
பணியாளர் குழு தலைவர்
Dr. Tony Stone
Chief of Staff